**O.S.No.51/2020**

வா.சா.1, திருமதி.இருளாயி
நாள் : 03.12.2024 நேரம் : 12.22 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1)வழக்கு சொத்துக்கள் இரண்டு மற்றும் சர்வே எண்.195/4 ஏ 2 ஆகிய 3 சொத்துக்களும் ஒரே நான்கு மால்களுக்குள் உள்ளது என்றால் சரிதான். அந்த ஒரே நான்கு மால் என்பது வடக்கே குருசாமி வகையறா புஞ்சையும், தெற்கே பாண்டித்தேவர் வகையறா புஞ்சையும், மேற்கே தென்வடல் ரோடும், கிழக்கே கருமண் கிராம கண்மாய் ஆகும். மேற்படி நான்கு மால்களுக்கு 1 ஏக்கருக்கு 48 செண்ட் விஸ்தீரணம் உள்ளது. எனது தாயார் முத்தம்மாளுக்கு தாவா சொத்துக்கள் மற்றும் மேற்படி சர்வே எண் 195/4 ஏ 2 சொத்துக்கள் பூர்வீக பாத்தியமானது.

2)எனது தாயாருடன் உடன்பிறந்த சகோதரி லட்சுமிக்கு எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் அது பற்றி தெரியவில்லை. தாவா 2 வது லக்க சொத்தின் வடபுறம் 37 செண்ட் மேற்படி சர்வே எண். 195/4 ஏ 2 ல் கண்ட சொத்து மேற்படி லட்சுமிக்கு பாகமாக கிடைத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அம்மாவிற்கு மேற்கும், சின்னமாவிற்கு கிழக்குமாக அனுபவித்து வந்தார்கள். தாவா 1 வது லக்க சொத்து முழுவதும் மற்றும் தாவா 2 வது லக்க சொத்தின் தென்புறம் 40 செண்டும் எனது தாயாருக்கு கிடைத்தது என்றால் தெரியாது. எனது தாயார் முத்தம்மாள் இறந்து 5 வருடங்கள் ஆகிறது. எனது தந்தை இறந்து 4 வருடங்கள் ஆகிறது.

3)லட்சுமிக்கு கிடைத்த சொத்தை லட்சுமி இறந்து பிறகு அவரது மகளான 3 ம் பிரதிவாதி சிவகாமி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியான முத்துலட்சுமிக்கு பங்குக்கு கொடுத்திருந்தோம். எனது தாயார் இறந்த பிறகு அவரது பாகத்தை வாதிகளும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளும்

பாத்தியமடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு நாங்கள் பங்குக்கு கொடுத்திருந்தோம். யாரெல்லாம் பங்குக்கு கொடுத்தோம் என்றால் நானும், எனது அண்ணனான 1ம் வாதிதான் பங்கு கொடுத்தோம். யார் முன்னிலையில், எந்த தேதியில் பங்குக்கு கொடுத்தோம் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக நாங்களே பேசி பங்கு கொடுத்துவிட்டோம். நான் பங்குக்கு விடாமல் பொய்யாக வழக்கிற்காக பங்கு விட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4)1 மற்றும் 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு 19.02.1991ம் தேதி கிரையம் எழுதிக்கொடுக்கும் போது நான் ஏன் சென்று தடுக்கவில்லை என்றால் நான் வெளியூரில் இருந்ததால் நான் தடுக்கவில்லை. மேற்படி பத்திரம் பற்றி எப்போது தெரிய வந்தது என்றால் 3 வருடங்களுக்கு முன்பாக தான் தெரியும். 20.09.2006ம் தேதி 3ம் பிரதிவாதி மேற்படி பத்திரத்தில் கண்ட சொத்தையும் அவரது தாயார் மூலம் பாகம் கிடைத்த சொத்தையும் குமரவேலுக்கு எழுதி கொடுத்தவிவரம் எனக்கு தெரியாது. 2006ம் ஆண்டிலிருந்தே குமரவேலுதான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை, நாங்கள் பங்குக்கு கொடுத்ததால் தான் 2006ம் ஆண்டிலிருந்து குமரவேல் அனுபவம் செய்து வருகிறார்.

5)மேற்படி குமரவேல் இறந்த பின்பு தாவா சொத்துக்களை அவரது வாரிசுகளான 4 முதல் 6 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நாங்கள் பங்குக்கு கொடுத்ததால் தான் அனுபவம் செய்து வருகிறார்கள். குமரவேல் எத்தனை முறை பங்கு என்னிடம் கொடுத்தார் என்றால் 10 வருடங்களாக கொடுத்து வருகிறார். அவரது வாரிசுகளும் வருடா வருடம் கொடுத்து வருகிறார்கள். தற்போது 3 வருடமாக கொடுக்கவில்லை. பங்கு கொடுத்ததை என்னால் நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால் நாங்களே எங்களுக்குள் பேசிக்கொண்டதற்கு எவ்வாறு நிரூபிக்க முடியும். பங்கு கொடுத்தது பற்றி எங்களை தவிர தனிநபர்கள் யாருக்கும் தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் கூறுவதுபோல் எந்தவிதமான பங்கு கொடுக்காததால்

தான் யாரையும் விசாரிக்க தயாராக இல்லை என்றால் சரியல்ல.

6)1991ம் ஆண்டிலிருந்து 2006ம் வரை 3ம் பிரதிவாதி தான் தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான், பங்கு விட்டதால் அனுபவம் செய்து வருகிறார். 2006ம் ஆண்டிலிருந்து குமரவேல் அனுபவம் செய்து வந்து அவர் இறந்த பின்பு அவரது வாரிசுகளான 4 முதல் 6 பிரதிவாதிகள் தான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் பங்குக்காக தான் கொடுத்தேன் என்று நிரூபிக்காத வரை எனது வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் ஏற்படுவதற்கு முன்பாகவே பங்கு குறித்து கேட்டேனா என்றால் கேட்டேன் அவர்கள் கொடுக்கவில்லை.

7)நான் வழக்கிற்காக பத்திரம் ஏற்பட்ட காலத்திலே தெரிந்துகொண்டு காலவரம்பை தவிர்ப்பதற்காக 2020ம் ஆண்டில் தான் தெரியும் என்று பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்ததற்கு வாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் எங்களது பெயரில் இல்லை, எனது அம்மா மற்றும் சின்னம்மா பெயரில் உள்ளது. வழக்கு சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்திற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யாத வரை வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை தவிர்த்து குமரவேல் எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தில் வேறு சொத்துக்களும் உள்ள நிலையில் மொத்தமாக ரத்து செய்யசொல்லி நான் கேட்டுக்கொண்டுள்ள கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

8)இந்த வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தேவையில்லாத தரப்பினர் என்று சொன்னால் சரியல்ல. 2006ல் குமரவேல் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் அதற்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பட்டாவை மாற்றியததால் தான் குமரவேல் பங்கு தரவில்லை. 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு கிரைய ஆவணங்கள் மூலம், எதிரிடை அனுபவம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில்

எனக்கோ, 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கோ பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பாகபரிகாரம் மற்றும் பத்திரங்கள் செல்லாது என்று கோரியுள்ள பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.59 P.M

சாட்சியின் கையொப்பம்.